வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 140 of 2016

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தங்கராஜு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ரங்கசாமி | தொழில் | : | ஆய்வாளர் |
| கிராமம் | : | சென்னை மாநகர காவல் துறையில் பாதுகாப்பு பிரிவு | சமயம் | : | |
| தாலுக்கா | : | சென்னை | வயது | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26.11.2024.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 26.11.2024**

1) நான் தற்போது சென்னை மாநகர காவல் துறையில் பாதுகாப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2017 ஆம் தேதி 6.00 மணிக்கு தலைமை காவலர் திரு.காமராஜ் என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது செல்வகுமாரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண்.1049/2015, சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இதசன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் முதல் தகவல் அறிக்கையுடன், வாதியின் புகாரினை இணைத்து கனம் நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்துள்ளார். அவர் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆகும். வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2) நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணசாமி, குற்றாலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் காலை 9.00 மணிக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில் இறந்துபோன பத்மா என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும்

பஞ்சாயத்தாரர்கள் முன்னிலையில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5** ஆகும்.

3) இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தினை 1585 திரு.நாகராஜ் என்பவர் மூலம் உடற்கூராய்விற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் நாகராஜ், செல்வகுமாரி, முருகன், கருப்புசாமி, முருகன், விஜயகுமார், வெங்கடேசன், அம்சா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) பின்னர் 10.09.2015 ஆம் தேதி முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் 31.08.2015 ஆம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை நிலையத்தில் வைத்து எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். வாகனங்களை ஆய்வு செய்து வழங்கிய திருப்பூர் தெற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்தியமூர்த்தி அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்கமூலம் பதிவு செய்தேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7** ஆகும்.

5) இறந்துபோன பத்மாவிற்கு முதல் சிகிச்சை அளித்த பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் ஜமுனாராணி அவர்களை விசார்த்து விபத்து பதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ.8** ஆகும். கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் தேன்மொழி அவர்களை விசாரித்து இறப்பு தகவல் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன பத்மா என்பவரின் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை வழங்கிய கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் நிம்மிசிவகுமார் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9** ஆகும். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 279, 304(A) இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

6) மருத்துவமனையிலிருந்து விபத்து குறித்து தகவல் வந்ததா என்றால் வந்தது. எந்த தேதி, எத்தனை மணிக்கு வந்தது, அதற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இண்டிமேசன் எதுவும் வரவில்லை. புகார்தாரர் நேரடியாக

நிலையம் ஆஜராகி புகார் கொடுத்துள்ளார். வழக்கில் காயம்பட்ட முருகன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். காயம்பட்ட நபர் முருகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் முருகனின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரிதான்.

7) இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2024.11.26 18:22:55 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.